# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


## முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்
## மேல்முறையீட்டு மனு எண் 66 /2017

திரு. K. விஜயராகவன்,
9/1–67, புலிக்கல் தோட்டம்,
கருப்பூர் அஞ்சல், ஓமலூர் தாலுகா,
சேலம் – 636 012. .. . . மேல்முறையீட்டாளர்
( திரு. K. விஜயராகவன்)

எதிர்

1) செயற் பொறியாளர்/சேலம்/மேற்கு,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அன்னதானபட்டி, சேலம்– 636 002.

2) உதவி செயற் பொறியாளர்/பகிர்மனம்/ கருப்பூர்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கருப்பூர், சேலம்– 636 012.

3) உதவி பொறியாளர்/ பகிர்மானம்/ கருப்பூர்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
வெள்ளக்கல்பட்டி, கருப்பூர், சேலம்– 636 012. . . . எதிர்மனுதாரர்கள்
(திரு. A. மௌலிசுவரன், செயற்பொறியாளர்/சேலம்/மேற்கு,
திரு. K. ராதாகிருஷ்ணன், உதவிசெயற்பொறியாளர்/ கருப்பூர் &
திருமதி. R.A. கலையரசி, உதவி பொறியாளர்/ கருப்பூர்)

**கேட்புரை நாள் : 20–12–2017**

**ஆணை நாள் : 01.06.2018**

திரு. K. விஜயராகவன், கருப்பூர் அஞ்சல், ஓமலூர் தாலுகா, சேலம் – 636 012. அவர்களின் 23.10.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 66 / 2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.12.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

மேல்முறையீட்டாளர் தனது கட்டிடத்திற்கு தொழில்முறை மின்சார இணைப்பு வேண்டி உரிய ஆவணங்களோடு உதவி பொறியாளரிடம் விண்ணப்பம் கொடுத்திருந்தார். மின் இணைப்பு வழங்க காலதாமதம் ஏற்பட்டதால் tnercயின் விதிமுறைப்படி நாளது தேதிவரை அதிகபட்ச இழப்பீடு தொகை வழங்கவும் அவருக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்கவும் ஆவண செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

## 2. வழக்கின் சுருக்கம்:

2.1 சேலம் மாவட்டம், ஒமலூர் வட்டம், கருப்பூர் கிராமத்தில் ச.எண்.141/2A3Aல் உள்ள 42 செண்ட் உள்ள 9/1–72/1, எண் கொண்ட கட்டிடத்திற்கு தொழில்முறை மின்சார இணைப்பு வேண்டி கடந்த 24.1.2015ல் உரிய ஆவணங்களோடு உதவி பொறியாளரிடம் விண்ணப்பம் கொடுத்திருந்தார். விண்ணப்பம் பெற்ற உதவி பொறியாளர் மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்க ஆட்சேபனை உள்ளதால் அரசு வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை பெறவேண்டும் என்று கூறி ஆறு மாதத்திற்கு பிறகு 6.7.2015ல் சட்டகருத்துரை பெற்றதோடு தமிழ்நாடு மின்சார வாரிய சட்ட பிரிவிலும் கருத்துரை பெற்ற பிறகு மின்கம்பம் நடவேண்டிய இடத்தின் உரிமையாளரின் அனுமதி கடித்தை பெற்று கொண்டும் சுமார் 7 மாதத்திற்கு பிறகு தான் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு 26.8.2015 அன்று டெபாசிட் தொகை மற்றும் இதர கட்டணங்களான ரூ.7800/– பெறப்பட்டும் மின் இணைப்பு வழங்காததால் இதுகுறித்து சேலம் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 10.8.2017ல் புகார் மனு அளித்தார். மன்றத்தால் 26.9.2017ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்க ஆணை பிறப்பித்தும் இன்றுவரை மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்காததால் மின்குறைதீர்ப்பாளர் முன்பாக மேல்முறையீடு செய்துள்ளார்.

## 3. மன்றத்தின் தீர்வு

3.1 சேலம் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 26.9.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. மன்றத்தின் ஆணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் ஆணை*

*மனுதாரரின் மனுவில் தனக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியும் மற்றும் (1) குறிப்பிட்ட காலத்திற்குள் மின்இணைப்பு வழங்காமல் காலம் தாழ்த்தி மன உளச்சல் ஏற்படுத்தியது (2) தொழில் நஷ்டம் ஏற்படுத்தியுது ஆகிய குறைபாடுகளுக்கு இழப்பீடு வேண்டியும் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*மனுதாரர் திரு. கே. விஜயராகவன் அவர்களுக்கு எதிராக திரு. கே. மகாதேவன் அவர்கள் தொடர்ந்துள்ள வழக்கு எண்.OS No.290/2009 நிலுவையில் இருந்து வருவதால் மனுதாரருக்கு மின்இணைப்பு வழங்க அரசு வழக்கறிஞர் ஓமலூர் அவர்களிடம் ஏற்கனவே 24.7.2017 அன்று கோரப்பட்ட சட்ட கருத்துரையினை பெற்று காவல் துறை உதவியுடன் மின் விஸ்தரிப்பு பணிகளை மேற்கொண்டு 15 தினங்களுக்குள் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்படுகிறது.*

*தேவை ஏற்படின், மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களை மாவட்ட நீதிபதி என்ற நிலையில் அணுகி பணிமேற்கொள்ள அனுமதி பெற்று மின் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.*

*மனுதாரர் மனுவில் கோரப்பட்டுள்ள, குறிப்பிட்ட காலத்திற்குள் மின்இணைப்பு வழங்காமல் காலம் தாழ்த்தியதற்கு மற்றும் தொழில் நஷ்டம் ஏற்படுத்தியதற்கு மேற்கண்ட மின்இணைப்பு கோரும் இடத்தில் வழக்கு நிலுவையின் காரணமாகவே காலதாமதம் ஏற்பட்டது என்பதாலும் வாரிய விதிகளின்படியும் இழப்பீடு வழங்க இயலாது என்பதை தெரிவிக்கப்படுகிறது."*

**4. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:**

**4.1** மேல்முறையீட்டாளர் சேலம் மாவட்டம், ஒமலூர் வட்டம், கருப்பூர் கிராமத்தில் ச.எண்.141/2A3Aல் உள்ள 42 செண்ட் உள்ள 9/1–72/1, எண் கொண்ட கட்டிடத்திற்கு தொழில்முறை மின்சார இணைப்பு வேண்டி கடந்த 24.1.2015ல் உரிய ஆவணங்களோடு உதவி பொறியாளரிடம் விண்ணப்பம் கொடுத்திருந்தார்.

**4.2** விண்ணப்பம் பெற்ற உதவி பொறியாளர் மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்க ஆட்சேபனை உள்ளதால் அரசு வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை பெறவேண்டும் என்று கூறி ஆறு மாதத்திற்கு பிறகு 6.7.2015ல் சட்டகருத்துரை பெற்றதோடு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சட்ட பிரிவிலும் கருத்துரை பெற்று அதன் பிறகு மின்கம்பம்

நடவேண்டிய இடத்தின் உரிமையாளரின் அனுமதி கடித்தையும் பெற்றுக் கொண்டு சுமார் 7 மாதத்திற்கு பிறகு தான் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு 26.8.2015 அன்று டெபாசிட் தொகை மற்றும் இதர கட்டணங்களான ரூ.7800/– பெறப்பட்டும் மின் இணைப்பு வழங்கவில்லை என்று முறையீட்டுள்ளார்.

4.3 இதுகுறித்து சேலம் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 10.8.2017ல் புகார் மனு அளித்ததில் மன்றத்தால் 26.9.2017ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் 15 தினங்களுக்குள் மின்இணைப்பு வழங்க ஆணை பிறப்பித்தும் இன்றுவரை மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கவில்லை என்று கூறுகிறார்.

4.4 மேல்முறையீட்டாளரின் கட்டிடம் அமைந்துள்ள ச.எண்.141/2A3A இல் எந்த வழக்கும் இல்லை. ஆட்சேபனை செய்பவர்களுக்கும் மின் இணைப்பு கோரும் இடத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை அரசு வழக்கறிஞர் தனது சட்ட கருத்துரையில் தெளிவுப்படுத்தியும் ச.எண்.141/2A3Aல் வழக்கு இருக்கிறது என்று உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகிய மூவரும் கடந்த 33 மாதங்களாக மின்இணைப்பு வழங்காமல் மேல்முறையீட்டாளரை மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கியதோடு மட்டும் அல்லாமல் அவருக்கு தொழில் நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளனர்.

4.5 எனவே, சமூகம் அவர்கள் TNERCன் விதிமுறைப்படி நாளது தேதிவரை அதிகபட்ச இழப்பீடு தொகை வழங்க ஆவண செய்வதோடு மட்டுமல்லாமல் மேல்முறையீட்டாளருக்கு உடனடியாக மின்இணைப்பு வழங்க ஆவண செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறார்.

## 5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

5.1 கருப்பூர் உபகோட்டம் கருப்பூர் பிரிவிற்குட்பட்ட கருப்பூர் கிராமம் புலிக்கல் தோட்டம் ச.எண்.141/2A3A ல் உள்ள க.எண்.9/1–72/1 கொண்ட கட்டிடத்திற்கு மாட்டுப் பண்ணை உபயோகத்திற்காக 7.5 HP + 360 W மின் பளு தொழில் முறை மின்இணைப்பு வேண்டி திரு. கே. விஜயராகவன் த/பெ குப்பசாமி கவுண்டர் அவர்கள் பத்திர நகல் சொத்துவரி ரசீது பட்டா சிட்டா மற்றும் அடங்கல் ஆகிய ஆவணங்களை இணைத்து மின்இணைப்பு வேண்டி கருப்பூர் /இப/ பிரிவில் 25.5.2015 அன்று விண்ணப்பம் அளித்தார்.

5.2 மேல்முறையீட்டாளர் விண்ணப்பம் அளிப்பதற்கு முன்னதாகவே 2.5.2015 மற்றும் 22.1.2015 தேதிகளில் திரு. கே. மகாதேவன் மற்றும் திரு. பூசாரி அவர்களிடமிருந்து மனுதாரர் திரு. கே. விஜயராகவன் அவர்கள் போலியான ஆவணங்களை தயார் செய்து மின்இணைப்பு பெற முயற்சிப்பதாகவும் மற்றும் மேற்படி சொத்துரிமை தொடர்பாக ஓமலூர் நீதிமன்றத்தில் வழக்கு எண். OS.No.290/2009 மற்றும் OS No.335/2009 முறையே நிலுவையில் உள்ளதால் மின்இணைப்பு வழங்க கூடாது என ஆட்சேபனை பெறப்பட்டதால் உதவி பொறியாளர் /இப/கருப்பூர் அவர்கள் கிராம நிர்வாக அலுவலர்/கருப்பூர் அவர்களிடம் மேற்படி க.எண்.9/1–72/1 உள்ள கட்டிடம் ச.எண்.141/2A3A ல் உள்ளதா ? என்றும் அது யாருக்கு சொந்தம் என சான்றிதழ் கோரப்பட்டது. கிராம நிர்வாக அலுவலர் / கருப்பூர் அவர்கள் ஓமலூர் வட்டம், கருப்பூர் கிராமம் புல எண்.141/2A3A பு.விஸ்தீர்ணம் 0.17.0 ஏர்ஸ் புலமானது குப்புசாமி கவுண்டர் மகன் விஜயராகவன் என்பவர் பெயர் பட்டா எண்.900ல் தாக்கலாகி உள்ளது. இப்பட்டாவில் வேறு நபர்கள் பெயர் இல்லை. கருப்பூர் கிராமம் கதவு இலக்கம் 9/1–72/1 கொண்ட சிமெண்ட் அட்டை கட்டிடம் ச.எண். 141/2A3Aல் உள்ளது என விசாரணை மூலம் தெரிவிக்கப்படுகிறது எனவும், மேலும் திரு. குப்புசாமி கவுண்டர் மகன் திரு. மகாதேவன் என்பவர் நீதிமன்றத்ல் புல எண்.141/2A3A ல் (O.S. 290/2009) வழக்கு நடைபெற்று வருவதாகவும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார் என சான்று வழங்கியுள்ளார்.

5.3 இந்நிலையில் மேற்படி விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ள அரசு வழக்கறிஞர் ஓமலூர் அவர்களிடம் 19.5.15 உதவி பொறியாளர்/இ&ப/ கரூப்பூர் அவர்களால் சட்ட கருத்துரை கோரப்பட்டது. அதன் பேரில் அரசு வழக்கறிஞர் அவர்கள் 6.7.2015 அன்று தனது சட்டகருத்துரையை அளித்துள்ளார். அதில் மின் வாரியத்தின் மீது வழக்கு ஏதும் நிலுவையில் இல்லை என்பதால் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தனது சட்டக் கருத்துரையில் தெரிவித்துள்ளார். மேலும் திரு. கே. விஜயராகவன் அவர்கள் கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்க 1 span conversion மற்றும் 1 கம்பம் அமைத்து 1 span line அமைக்கும் பணி செய்யவேண்டியுள்ளது. அவ்வாறு line அமைக்க உள்ள இடம் M/s Dalmia Magnesite Company loco track இடையில் உள்ளதால் திரு. கே. விஜயராகவன் அவர்களால் M/s Dalmia Magnesite Company யிடமிருந்து நிபந்தனைகளுடன் அனுமதி பெறப்பட்டு அதன் நகல் விண்ணப்பத்துடன் இணைக்ககப்பட்டுள்ளது. அதன் பின்னர் மேற்படி திரு. கே. விஜயராகவன் அவர்களது விண்ணப்பம் 7.8.2015 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

5.4 அதனை தொடர்ந்து மதிப்பீடு பெறப்பட்டு டெபாசிட் தொகை ரூ.7800/– யை திரு. கே. விஜயராகவன் அவர்களால் கருப்பூர் அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி மின்இணைப்பு வழங்க ஒரு span conversion மற்றும் ஒரு Span Extension விஸ்தரிப்பு பணியுமாக அனுமதி பெறப்பட்ட நிலையில் விஸ்தரிப்பு பணி 8.10.2015 அன்று மேற்கொள்ளப்படும்பொழுது திரு.மகாதேவன் அவர்கள் தங்களுக்குள் சொத்து சம்மந்தமாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என கடுமையாக ஆட்சேபனை செய்து விஸ்தரிப்பு பணியை முடக்கியதுடன் அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் வாய்த்தகராறு ஏற்பட்டு கல்வீச்சு சம்பவம் நடைபெற்ற பொழுது வாரிய பணியாளர்களின் நலன் கருதி பணி கைவிடப்பட்டது. மேற்படி விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனை சரி செய்து கொடுக்கும்பட்சத்தில் பணிகள் முடிக்கப்பட்டு மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

5.5 வாரியத்தின் சார்பில் மேற்படி பணியை முடிக்க உரிய பாதுகாப்பு அளிக்க காவல் ஆய்வாளர் சூரமங்கலம் அவர்களிடம் 8.10.15, 4.4.16, 6.4.16, 10.4.2016, 20.4.2016, 4.5.2016, 15.5.2016, 22.6.2016, 15.9.2016, 1.12.2016, 30.3.2017 மற்றும் 6.7.2017 ஆகிய தேதிகளில் மனு அளிக்கப்பட்டும் மேலும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் அவர்கள் காவல் ஆய்வாளர் அவர்களை நேரில் பலமுறை அணுகியும் பாதுகாப்பு அளிக்க கோரப்பட்டது. அப்பொழுது காவல் ஆய்வாளர் அவர்கள் மேற்படி திரு. கே. விஜயராகவன் அவர்களை அவருடைய நில எல்லையை அளந்து முட்டுபதித்து தெரிவிக்கும் பட்சத்தில் காவல்துறை அங்குவந்து பாதுகாப்பு அளிக்கும் என்பதை திரு. கே. விஜயராகவன் அவர்களிடம் தெரிவித்துள்ளதாகவும் ஆனால், இதுவரை அவர் அவ்வேலையை செய்துவிட்டு வரவில்லை என்பதை தெரிவித்து அவர் அவ்வாறு வரும்பட்சத்தில் பணியை மேற்கொள்ள பாதுகாப்பு அளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

5.6 மேலும், இவர்களுடைய பிரச்சனை சம்மந்தமாக ஒமலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மின் இணைப்பு கோரும் இடத்திற்கு நேரில் வந்து இருவருக்கும் (திரு. கே. மகாதேவன் மற்றும் திரு. கே. விஜயராகவன்) தக்க அறிவுரை கூறி திரு. கே. விஜயராகவன் நிலத்தில் உள்ள மின் கம்பத்திலிருந்து மின்இணைப்பு பெற்று கொள்ள அறிவுரை கூறி சமாதானம் செய்துவிட்டு சென்றார். அப்பொழுது ஒப்புகொண்ட திரு. கே. விஜயராகவன் மறுநாளே அவருடைய தோட்டத்தில் மின்கம்பம் போட வேண்டாம் என்றும் திரு. கே. மகாதேவன் ஆட்சேபனை செய்யும் வழியிலேயே மின்கம்பம் அமைத்து மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துவிட்டார்.

5.7 இந்நிலையில் 6.7.2017 அன்று சூரமங்கலம் காவல் உதவி ஆணையாளர் அவர்களை உதவி செயற்பொறியாளர்/கருப்பூர் மற்றும் உதவி பொறியாளர்/கருப்பூர் அவர்கள் நேரில் சந்தித்து திரு. விஜயராகவன் அவர்களின் தொழில் மின்இணைப்பு நீட்டிப்பு பணி செய்ய பணியாளர்களுக்கு பாதுகாப்பு கோரும் கடிதம் வழங்கிய போது அவர் ஆவணங்களை படித்து OS No.290/2009ல் நீதிமன்ற வழக்கு தற்போது மின் வாரியத்தின் மீது நிலுவையில் இருப்பதாக திரு. மகாதேவன் அவர்கள் மனு அளித்துள்ளதால் அதற்கு தற்போதைய சட்ட கருத்தரையை அரசு வழக்கறிஞர் அவர்களிடம் பெற்று மின் வாரியத்தின் வழியாக பாதுகாப்பு கோரும் பட்சத்தில் பாதுகாப்பு வழங்க ஆவண செய்வதாக தெரிவித்தார்.

5.8 திரு. விஜயராகவன் அவர்களுக்கு மாற்று வழியில் மின்இணைப்பு வழங்க அவரின் தோட்டத்தில் ஏற்கனவே உள்ள விவசாய மின்இணைப்பு வழங்கப்பட்ட கிணற்றிலிருந்து கம்பங்கள் அமைத்து மின்பாதை நீட்டிப்புசெய்தால் அவருக்கு மின் இணைப்பு வழங்கலாம். ஆனால், அவ்வழியில் மின்பாதை நீட்டிப்பு செய்ய அளவீடு மேற்கொண்ட போது திரு. விஜயராகவன் அவர்கள் தனது தோட்டத்தின் வழியாக மின்நீட்டிப்பு செய்யக்கூடாது என வாய்மொழியாக கடுமையாக ஆட்சேபனை தெரிவித்ததால் அவ்வழியாக மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை.

5.9 இந்நிலையில் மேற்கண்ட வழக்கு OS 290/2009ல் எதிர்மனுதாராக உதவி செயற்பொறியாளர்/இப/கருப்பூர் மற்றும் உதவி பொறியாளர்/இப/கருப்பூர் அவர்களை implead செய்துள்ளதால் திரு. விஜயராகவன் அவர்களுக்கு தொழில் மின்இணைப்பு வழங்க மின் நீட்டிப்பு செய்ய வழக்கின் தன்மை குறித்து சட்டகருத்துரை வேண்டி 24.7.2017 அன்று அரசு வழக்கறிஞர் ஓமலூர் அவர்களிடம் உதவி பொறியாளர் அவர்களால் கோரப்பட்டது.

5.10 மேலும், திரு. கே. விஜயராகவன் அவர்கள் மேற்பார்வைப் பொறியாளர் சேலம் மின்பகிர்மான வட்டம் சேலம் அவர்களிடம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் (CGRF) மூலம் மனு அளித்ததின் பேரில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் காவல் துறை உதவியுடன் மின் விஸ்தரிப்பு பணிகளை மேற்கொண்டு 15 தினங்களுக்குள் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணை வழங்கியுள்ளது.

5.11 CGRF உத்திரவின் படி உடனடியாக அரசு வழக்கறிஞர் அவர்களை அணுகி சட்ட கருத்துரை வேண்டி கோரியதற்கு அரசு வழக்கறிஞர் அவர்கள் கருத்துரு வேண்டி மீண்டும் கடிதம் அளிக்க கேட்டுக் கொண்டார். அதனை தொடர்ந்து 6.10.17 அன்று கருத்துரு வேண்டி கடிதம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து அரசு வழக்கறிஞர் அவர்கள் IA 671/2017 in OS No.290/2009ற்கு counter file செய்துவிட்டு சட்ட கருத்துரை வழங்குவதாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து counter தயார் செய்து அரசு வழக்கறிஞரால் வழக்கு வாய்தா தேதியான 9.10.17 அன்று கொண்டு சென்ற போது மறு தேதியிட்டு 27.10.17 அன்று ஒத்தி வைக்கப்பட்டது. 27.10.17 அன்று எந்த வழக்கும் நடைபெறாமல் வாய்தா தேதி மட்டுமே 17.11.17 அன்று என்று ஒத்தி வைக்கப்பட்டது. மேலும், 17.11.17 அன்று counter file நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் அவர்கள் O.S.No.290/2009 வழக்கு நிலுவையில் இருப்பதாலும் மின் பகிர்மான கழகத்திற்கு எதிராக எந்த ஒரு உத்திரவும் இல்லாத நிலையிலும் மனுதாரர் கோரும் பரிகாரங்கள் மின்பகிர்மான சட்ட விதிகளுக்குட்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என 20.11.2017 அன்று சட்ட கருத்துரை வழங்கியுள்ளார்.

5.12 அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்களின் சட்டக்கருத்துரையின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 21.11.2017 அன்று காவல் ஆய்வாளர் சூரமங்கலம் அவர்களிடம் பணி மேற்கொள்ள பாதுகாப்பு வேண்டி விண்ணப்பம் அளிக்கப்பட்டது. மேலும், 22.11.2017 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் காவல் துறை பணியாளர்களுடன் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ள மேற்கண்ட இடத்திற்கு சென்று M/s Dalmia Magnesite Company நிறுவனத்தின் நிபந்தனைகளின்படி trackல் இருந்து 20 அடிக்கு அப்பால் ஒரு குறிப்பிட்ட இடம் மட்டுமே இருந்ததாலும் இந்த இடத்தில் பணி மேற்கொள்ளப்படும்போது திரு. கே. மகாதேவன் அவர்கள் தனக்கும் டால்மியா கம்பெனிக்கும் அந்த இடம் குறித்து நில பிரச்சனை இருப்பதாகவும் நேரடியாக பணி மேற்கொள்ளவிடாமல் தடுத்து ஆட்சேபனை தெரிவித்தார். மேலும், அவ்விடத்தில் கம்பம் நடப்பட்டாலும் புதிய மின்பாதை அந்த கம்பத்தில் அமைக்கப்படும் பொழுது திரு. பூசாரி அவர்களின் நிலத்தின் வழியாக ஒரு குறிப்பிட்ட அளவு மட்டும் அமைக்கப்படவேண்டி இருப்பதால் திரு. பூசாரி அவர்களும் ஏற்கனவே எழுத்துப்பூர்வமாக ஆட்சேபனை தெரிவித்ததாலும் தற்போது நேரடியாக ஆட்சேபனை தெரிவிப்பதாலும் பணி மேற்கொள்ள இயலாமல் தடைப்பட்டது.

5.13 மேற்கண்ட காரணங்களால் மின் நுகர்வோர் குறைதிர்க்கும் மன்றத்தின் ஆணைப்படி குறிப்பிட்ட 15 தினங்களுக்குள் மின்இணைப்பு வழங்க இயலவில்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 20.12.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. கே. விஜயராகவன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர்கள் சார்பில் திரு. A. மௌலிசுவரன், செயற்பொறியாளர்/சேலம்/மேற்கு, திரு. K. ராதாகிருஷ்ணன், உதவி செயற் பொறியாளர் /கருப்பூர் & திருமதி. R.A. கலையரசி, உதவி பொறியாளர்/கருப்பூர் ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

## 7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் திரு. கே. விஜயராகவன் அவர்கள் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கருப்பூர் கிராமத்தில் ச.எண்.141/2A3Aல் உள்ள 42 சென்ட் உள்ள 9/1–72/1, எண் கொண்ட கட்டிடத்திற்கு தொழில்முறை மின்சார இணைப்பு வேண்டி கடந்த 24.1.2015ல் உரிய ஆவணங்களோடு உதவி பொறியாளரிடம் விண்ணப்பம் கொடுத்திருந்தார்.

7.3 விண்ணப்பம் பெற்ற உதவி பொறியாளர் மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்க ஆட்சேபனை உள்ளதால் அரசு வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை பெறவேண்டும் என்று கூறி ஆறு மாதத்திற்கு பிறகு 6.7.2015ல் சட்டகருத்துரை பெற்றதோடு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சட்ட பிரிவிலும் கருத்துரை பெற்று அதன் பிறகு மின்கம்பம் நடவேண்டிய இடத்தின் உரிமையாளரின் அனுமதி கடித்தையும் பெற்று கொண்டு சுமார் 7 மாதத்திற்கு பிறகு தான் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு 26.8.2015 அன்று டெபாசிட் தொகை மற்றும் இதர கட்டணங்களான ரூ.7800/– பெறப்பட்டும் மின் இணைப்பு வழங்கவில்லை என்று முறையீட்டுள்ளார்.

7.4 இதுகுறித்து சேலம் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 10.8.2017ல் புகார் மனு அளித்ததில் மன்றத்தால் 26.9.2017ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் 15 தினங்களுக்குள் மின்இணைப்பு வழங்க ஆணை பிறப்பித்தும் இன்றுவரை மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கவில்லை என்று கூறுகிறார்.

7.5 மேல்முறையீட்டாளரின் கட்டிடம் அமைந்துள்ள ச.எண்.141/2A3A இல் எந்த வழக்கும் இல்லை. ஆட்சேபனை செய்பவர்களுக்கும் மின் இணைப்பு கோரும் இடத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை அரசு வழக்கறிஞர் தனது சட்ட கருத்துரையில் தெளிவுப்படுத்தியும் ச.எண்.141/2A3Aல் வழக்கு இருக்கிறது என்று உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகிய மூவரும் கடந்த 33 மாதங்களாக மின்இணைப்பு வழங்காமல் மேல்முறையீட்டாளரை மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கியதோடு மட்டும் அல்லாமல் அவருக்கு தொழில் நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளனர்.

7.6 எனவே, சமூகம் அவர்கள் TNERCன் விதிமுறைப்படி நாளது தேதிவரை அதிகபட்ச இழப்பீடு தொகை வழங்க ஆவண செய்வதோடு மட்டுமல்லாமல் மேல்முறையீட்டாளருக்கு உடனடியாக மின்இணைப்பு வழங்க ஆவண செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறார்.

## 8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர்கள் சார்பில் திரு. A. மௌலிசுவரன், செயற்பொறியாளர்/சேலம்/மேற்கு, திரு. K. ராதாகிருஷ்ணன், உதவிசெயற்பொறியாளர்/கருப்பூர் & திருமதி. R.A. கலையரசி, உதவி பொறியாளர்/கருப்பூர் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்கள்.

8.2 கருப்பூர் உபகோட்டம் கருப்பூர் பிரிவிற்குட்பட்ட கருப்பூர் கிராமம் புலிக்கல் தோட்டம் ச.எண்.141/2A3A ல் உள்ள க.எண்.9/1–72/1 கொண்ட கட்டிடத்திற்கு மாட்டுப் பண்ணை உபயோகத்திற்காக 7.5 HP + 360 W மின் பளு தொழில் முறை மின்இணைப்பு வேண்டி திரு. கே. விஜயராகவன் த/பெ குப்பசாமி கவுண்டர் அவர்கள் பத்திர நகல் சொத்துவரி ரசீது பட்டா சிட்டா மற்றும் அடங்கல் ஆகிய ஆவணங்களை இணைத்து மின்இணைப்பு வேண்டி கருப்பூர் பிரிவில் 25.5.2015 அன்று விண்ணப்பம் அளித்தார்.

8.3 மேல்முறையீட்டாளர் விண்ணப்பம் அளிப்பதற்கு முன்னதாகவே 2.5.2015 மற்றும் 22.1.2015 தேதிகளில் திரு. கே. மகாதேவன் மற்றும் திரு. பூசாரி அவர்களிடமிருந்து மனுதாரர் திரு. கே. விஜயராகவன் அவர்கள் போலியான ஆவணங்களை தயார் செய்து மின்இணைப்பு பெற முயற்சிப்பதாகவும் மற்றும் மேற்படி சொத்துரிமை தொடர்பாக ஓமலூர் நீதிமன்றத்தில் வழக்கு எண். OS.No.290/2009 மற்றும் OS No.335/2009 முறையே நிலுவையில் உள்ளதால் மின்இணைப்பு வழங்க கூடாது என ஆட்சேபனை பெறப்பட்டதால் உதவி பொறியாளர் /இப/கருப்பூர் அவர்கள் கிராம நிர்வாக அலுவலர்/கருப்பூர் அவர்களிடம் மேற்படி க.எண்.9/1–72/1 உள்ள கட்டிடம் ச.எண்.141/2A3A ல் உள்ளதா ? என்றும் அது யாருக்கு சொந்தம் என சான்றிதழ் கோரப்பட்டது. கிராம நிர்வாக அலுவலர் / கருப்பூர் அவர்கள் ஓமலூர் வட்டம், கருப்பூர் கிராமம் புல எண்.141/2A3A பு.விஸ்தீர்னம் 0.17.0 ஏர்ஸ் புலமானது குப்புசாமி கவுண்டர் மகன் விஜயராகவன் என்பவர் பெயர் பட்டா எண்.900ல் தாக்கலாகி உள்ளது. இப்பட்டாவில் வேறு நபர்கள் பெயர் இல்லை. கருப்பூர் கிராமம் கதவு இலக்கம் 9/1–72/1 கொண்ட சிமெண்ட் அட்டை கட்டிடம் ச.எண். 141/2A3Aல் உள்ளது என விசாரணை மூலம் தெரிவிக்கப்படுகிறது எனவும் மேலும், திரு. குப்புசாமி கவுண்டர் மகன் திரு. மகாதேவன் என்பவர் நீதிமன்றத்ல் புல எண்.141/2A3A ல் (O.S. 290/2009) வழக்கு நடைபெற்று வருவதாகவும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார் என சான்று வழங்கியுள்ளார்.

8.4 இந்நிலையில் மேற்படி விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ள அரசு வழக்கறிஞர் ஓமலூர் அவர்களிடம் 19.5.15 உதவி பொறியாளர்/இ&ப/ கரூப்பூர் அவர்களால் சட்ட கருத்துரை கோரப்பட்டது. அதன் பேரில் அரசு வழக்கறிஞர் அவர்கள் 6.7.2015 அன்று தனது சட்டகருத்துரையை அளித்துள்ளார். அதில் மின் வாரியத்தின் மீது வழக்கு ஏதும் நிலுவையில் இல்லை என்பதால் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தனது சட்டக் கருத்துரையில் தெரிவித்துள்ளார். மேலும் திரு. கே. விஜயராகவன் அவர்கள் கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்க 1 span conversion மற்றும் 1 கம்பம் அமைத்து 1 span line அமைக்கும் பணி செய்யவேண்டியுள்ளது. அவ்வாறு line அமைக்க உள்ள இடம் M/s Dalmia Magnesite Company loco track இடையில் உள்ளதால் திரு. கே. விஜயராகவன் அவர்களால் M/s Dalmia Magnesite Company யிடமிருந்து நிபந்தனைகளுடன் அனுமதி பெறப்பட்டு அதன் நகல் விண்ணப்பத்துடன் இணைக்ககப்பட்டுள்ளது. அதன் பின்னர் மேற்படி திரு. கே. விஜயராகவன் அவர்களது விண்ணப்பம் 7.8.2015 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

8.5 அதனை தொடர்ந்து மதிப்பீடு பெறப்பட்டு டெபாசிட் தொகை ரூ.7800/– யை திரு. கே. விஜயராகவன் அவர்களால் கருப்பூர் அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி மின்இணைப்பு வழங்க ஒரு span conversion மற்றும் ஒரு Span Extension விஸ்தரிப்பு பணியுமாக அனுமதி பெறப்பட்ட நிலையில் விஸ்தரிப்பு பணி 8.10.2015 அன்று மேற்கொள்ளப்படும்பொழுது திரு.மகாதேவன் அவர்கள் தங்களுக்குள் சொத்து சம்மந்தமாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என கடுமையாக ஆட்சேபனை செய்து விஸ்தரிப்பு பணியை முடக்கியதுடன் அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் வாய்த்தகராறு ஏற்பட்டு கல்வீச்சு சம்பவம் நடைபெற்ற பொழுது வாரிய பணியாளர்களின் நலன் கருதி பணி கைவிடப்பட்டது. மேற்படி விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனை சரி செய்து கொடுக்கும்பட்சத்தில் பணிகள் முடிக்கப்பட்டு மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

8.6 வாரியத்தின் சார்பில் மேற்படி பணியை முடிக்க உரிய பாதுகாப்பு அளிக்க காவல் ஆய்வாளர் சூரமங்கலம் அவர்களிடம் 8.10.15, 4.4.16, 6.4.16, 10.4.2016, 20.4.2016, 4.5.2016, 15.5.2016, 22.6.2016, 15.9.2016, 1.12.2016, 30.3.2017 மற்றும் 6.7.2017 ஆகிய தேதிகளில் மனு அளிக்கப்பட்டும், மேலும், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் அவர்கள் காவல் ஆய்வாளர் அவர்களை நேரில் பலமுறை அணுகியும் பாதுகாப்பு அளிக்க கோரப்பட்டது. அப்பொழுது காவல் ஆய்வாளர் அவர்கள் மேற்படி திரு. கே. விஜயராகவன் அவர்களை அவருடைய நில எல்லையை அளந்து முட்டுபதித்து தெரிவிக்கும் பட்சத்தில் காவல்துறை அங்குவந்து பாதுகாப்பு அளிக்கும் என்பதை திரு. கே. விஜயராகவன் அவர்களிடம் தெரிவித்துள்ளதாகவும் ஆனால் இதுவரை அவர் அவ்வேலையை செய்துவிட்டு வரவில்லை என்பதை தெரிவித்து அவர் அவ்வாறு வரும்பட்சத்தில் பணியை மேற்கொள்ள பாதுகாப்பு அளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

8.7 மேலும், இவர்களுடைய பிரச்சனை சம்மந்தமாக ஒமலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மின் இணைப்பு கோரும் இடத்திற்கு நேரில் வந்து இருவருக்கும் (திரு. கே. மகாதேவன் மற்றும் திரு. கே. விஜயராகவன்) தக்க அறிவுரை கூறி திரு. கே. விஜயராகவன் நிலத்தில் உள்ள மின் கம்பத்திலிருந்து மின்இணைப்பு பெற்று கொள்ள அறிவுரை கூறி சமாதானம் செய்துவிட்டு சென்றார். அப்பொழுது ஒப்புகொண்ட திரு. கே. விஜயராகவன் மறுநாளே அவருடைய தோட்டத்தில் மின்கம்பம் போட வேண்டாம் என்றும் திரு. கே. மகாதேவன் ஆட்சேபனை செய்யும் வழியிலேயே மின்கம்பம் அமைத்து மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துவிட்டார்.

8.8 இந்நிலையில் 6.7.2017 அன்று சூரமங்கலம் காவல் உதவி ஆணையாளர் அவர்களை உதவி செயற்பொறியாளர்/கருப்பூர் மற்றும் உதவி பொறியாளர்/கருப்பூர் அவர்கள் நேரில் சந்தித்து திரு. விஜயராகவன் அவர்களின் தொழில் மின்இணைப்பு நீட்டிப்பு பணி செய்ய பணியாளர்களுக்கு பாதுகாப்பு கோரும் கடிதம் வழங்கிய போது அவர் ஆவணங்களை படித்து OS No.290/2009ல் நீதிமன்ற வழக்கு தற்போது மின் வாரியத்தின் மீது நிலுவையில் இருப்பதாக திரு. மகாதேவன் அவர்கள் மனு அளித்துள்ளதால் அதற்கு தற்போதைய சட்ட கருத்தரையை அரசு வழக்கறிஞர் அவர்களிடம் பெற்று மின் வாரியத்தின் வழியாக பாதுகாப்பு கோரும் பட்சத்தில் பாதுகாப்பு வழங்க ஆவண செய்வதாக தெரிவித்தார்.

8.9 திரு. விஜயராகவன் அவர்களுக்கு மாற்று வழியில் மின்இணைப்பு வழங்க அவரின் தோட்டத்தில் ஏற்கனவே உள்ள விவசாய மின்இணைப்பு வழங்கப்பட்ட கிணற்றிலிருந்து கம்பங்கள் அமைத்து மின்பாதை நீட்டிப்புசெய்தால் அவருக்கு மின் இணைப்பு வழங்கலாம். ஆனால், அவ்வழியில் மின்பாதை நீட்டிப்பு செய்ய அளவீடு மேற்கொண்ட போது திரு. விஜயராகவன் அவர்கள தனது தோட்டத்தின் வழியாக மின்நீட்டிப்பு செய்யக்கூடாது என வாய்மொழியாக கடுமையாக ஆட்சேபனை தெரிவித்ததால் அவ்வழியாக மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை.

8.10 இந்நிலையில் மேற்கண்ட வழக்கு OS 290/2009ல் எதிர்மனுதாராக உதவி செயற்பொறியாளர்/இப/கருப்பூர் மற்றும் உதவி பொறியாளர்/இப/கருப்பூர் அவர்களை implead செய்துள்ளதால் திரு. விஜயராகவன் அவர்களுக்கு தொழில் மின்இணைப்பு வழங்க மின் நீட்டிப்பு செய்ய வழக்கின் தன்மை குறித்து சட்டகருத்துரை வேண்டி 24.7.2017 அன்று அரசு வழக்கறிஞர் ஓமலூர் அவர்களிடம் உதவி பொறியாளர் அவர்களால் கோரப்பட்டது.

8.11 மேலும், திரு. கே. விஜயராகவன் அவர்கள் மேற்பார்வைப் பொறியாளர் சேலம் மின்பகிர்மான வட்டம் சேலம் அவர்களிடம் மின் நுகர்வோர் குறைதிர்க்கும் மன்றத்தின் (CGRF) மூலம் மனு அளித்ததின் பேரில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் காவல் துறை உதவியுடன் மின் விஸ்தரிப்பு பணிகளை மேற்கொண்டு 15 தினங்களுக்குள் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணை வழங்கியுள்ளது.

8.12 CGRF உத்திரவின் படி உடனடியாக அரசு வழக்கறிஞர் அவர்களை அணுகி சட்ட கருத்துரை வேண்டி கோரியதற்கு அரசு வழக்கறிஞர் அவர்கள் கருத்துரு வேண்டி மீண்டும் கடிதம் அளிக்க கேட்டுக் கொண்டார். அதனை தொடர்ந்து 6.10.17 அன்று கருத்துரு வேண்டி கடிதம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து அரசு வழக்கறிஞர் அவர்கள் IA 671/2017 in OS No.290/2009ற்கு counter file செய்துவிட்டு சட்ட கருத்துரை வழங்குவதாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து counter தயார் செய்து அரசு வழக்கறிஞரால் வழக்கு வாய்தா தேதியான 9.10.17 அன்று கொண்டு சென்ற போது மறு தேதியிட்டு 27.10.17 அன்று ஒத்தி வைக்கப்பட்டது. 27.10.17 அன்று எந்த வழக்கும் நடைபெறாமல் வாய்தா தேதி மட்டுமே 17.11.17 அன்று என்று ஒத்தி வைக்கப்பட்டது. மேலும், 17.11.17 அன்று counter file நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் அவர்கள் O.S.No.290/2009 வழக்கு நிலுவையில் இருப்பதாலும் மின் பகிர்மான கழகத்திற்கு எதிராக எந்த ஒரு உத்திரவும் இல்லாத நிலையிலும் மனுதாரர் கோரும் பரிகாரங்கள் மின்பகிர்மான சட்ட விதிகளுக்குட்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என 20.11.2017 அன்று சட்ட கருத்துரை வழங்கியுள்ளார்.

8.13 அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்களின் சட்டக்கருத்துரையின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 21.11.2017 அன்று காவல் ஆய்வாளர் சூரமங்கலம் அவர்களிடம் பணி மேற்கொள்ள பாதுகாப்பு வேண்டி விண்ணப்பம் அளிக்கப்பட்டது. மேலும், 22.11.2017 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் காவல் துறை பணியாளர்களுடன் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ள மேற்கண்ட இடத்திற்கு சென்று M/s Dalmia Magnesite Company நிறுவனத்தின் நிபந்தனைகளின்படி trackல் இருந்து 20 அடிக்கு அப்பால் ஒரு குறிப்பிட்ட இடம் மட்டுமே இருந்ததாலும் இந்த இடத்தில் பணி மேற்கொள்ளப்படும்போது திரு. கே. மகாதேவன் அவர்கள் தனக்கும் டால்மியா கம்பெனிக்கும் அந்த இடம் குறித்து நில பிரச்சனை இருப்பதாகவும் நேரடியாக பணி மேற்கொள்ளவிடாமல் தடுத்து ஆட்சேபனை தெரிவித்தார். மேலும், அவ்விடத்தில் கம்பம் நடப்பட்டாலும் புதிய மின்பாதை அந்த கம்பத்தில் அமைக்கப்படும் பொழுது திரு. பூசாரி அவர்களின் நிலத்தின் வழியாக ஒரு குறிப்பிட்ட அளவு மட்டும் அமைக்கப்படவேண்டி இருப்பதால் திரு. பூசாரி அவர்களும் ஏற்கனவே எழுத்துப்பூர்வமாக ஆட்சேபனை தெரிவித்ததாலும் தற்போது நேரடியாக ஆட்சேபனை தெரிவிப்பதாலும் பணி மேற்கொள்ள இயலாமல் தடைப்பட்டது.

8.14 மேற்கண்ட காரணங்களால் மின் நுகர்வோர் குறைதிர்க்கும் மன்றத்தின் ஆணைப்படி குறிப்பிட்ட 15 தினங்களுக்குள் மின்இணைப்பு வழங்க இயலவில்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

**9. மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு –**

**9.1** மேல்முறையீட்டாளர் இவ்வழக்கில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை மேல்முறையீடாக வைத்துள்ளார்.

1) மேல்முறையீட்டாளருக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க ஆவண செய்ய வேண்டும்.

2) மின் இணைப்பு வழங்க காலதாமதம் ஏற்படுவதால் tnercயின் விதிமுறைப்படி நாளது தேதிவரை அதிகபட்ச இழப்பீடு தொகை வழங்க வேண்டும்.

**10. <u>கோரிக்கை 1–ற்கான தீர்வு</u> –**

**10.1** மேல்முறையீட்டாளரின் முதல் கோரிக்கையானது ஏற்கனவே சேலம் மின்பகிர்மான வட்ட மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் தீர்க்கப்பட்ட நுதல் பொருளாகும். இதுசம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17 (4) (அ) –ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“17. xxx xxx xxx*

*(4) கீழ்க் குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமதாரரின் மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்தமுறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும்.*

*பிரிவு 17 (1) ல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.”*

*xxx xxx xxx*

**10.2** மேற்கண்ட விதியினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், அவருடைய குறைகளை சம்பந்தப்பட்ட மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்தமுறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும் அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

10.3 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் முதல் கோரிக்கையானது சேலம் மின்பகிர்மான வட்ட மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தால் மேல்முறையீட்டாளருக்கு சாதகமாகவே தீர்வு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தால் வழங்கப்பட்ட தீர்வை உரிமதாரரான எதிர்மனுதாரர்கள் இதுவரையில் நிறைவேற்றவில்லை என்றும் அதன்பொருட்டே இங்கு மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது. மேல்முறையீட்டாளருக்கு மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் வழங்கிய தீர்வு ஏற்புடையதாகவே உள்ள நிலையில் மேற்கொண்டு மேல்முறையீட்டாளரின் முதல் கோரிக்கையானது ஏற்கனவே தீர்வு செய்யப்பட்ட ஒன்றாக நான் கருதுவதால் அவரின் முதல் கோரிக்கை தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

10.4 மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைத்தீர்ப்பாளர் வழங்கிய ஆணைகளுக்கு கீழ்படியாமை மின்சார சட்டத்தன் பிரிவு 142–ன் கீழ் நடவடிக்கைக்கு உள்ளாகும் என்பதால், குறைதீர் மன்றம் வழங்கிய தீர்வை நிறைவேற்றாத எதிர்மனுதாரர்கள் மீது நடவடிக்கை எடுப்பது மின்குறை தீர்ப்பாளரின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**11. <u>கோரிக்கை 2–ற்கான தீர்வு</u> –**

11.1 மேல்முறையீட்டாளர் சேலம் மாவட்டம், ஒமலூர் வட்டம், கருப்பூர் கிராமத்தில் ச.எண்.141/2A3Aல் உள்ள 42 சென்ட் உள்ள 9/1–72/1, எண் கொண்ட கட்டிடத்திற்கு தொழில்முறை மின்சார இணைப்பு வேண்டி கடந்த 24.1.2015ல் உரிய ஆவணங்களோடு உதவி பொறியாளரிடம் விண்ணப்பம் கொடுத்திருந்தார். ஆனால் நாளது தேதிவரை அவருக்கு மின் இணைப்பு வழங்க காலதாமதம் ஏற்படுவதால் tnercயின் விதிமுறைப்படி அதிகபட்ச இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

11.2 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் கருப்பூர் கிராமத்தில் ச.எண்.141/2A3Aல் உள்ள 42 சென்ட் உள்ள 9/1–72/1 எண் கொண்ட கட்டிடத்திற்கு தொழில்முறை மின்சார இணைப்பு வேண்டி கடந்த 24.1.2015ல் உரிய ஆவணங்களோடு விண்ணப்பத்ததாக தெரிவித்துள்ளார். ஆனால் 24.01.2015 அன்று விண்ணப்பித்தற்கான எந்தவொரு சான்றாவனத்தையும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பிக்கவில்லை. எதிர்மனுதாரரோ மேல்முறையீட்டாளர் 25.05.2015 அன்றுதான் விண்ணப்பித்தாக தெரிவித்துள்ளார். மேலும் அவ்விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை

மேற்கொள்ள அரசு வழக்கறிஞர் அவர்களிடம் 19.06.2015 அன்று சட்ட கருத்துரை கோரப்பட்டதற்கு, அரசு வழக்கறிஞர் 06.07.2015 அன்று சட்டகருத்துரை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

11.3 மேலும் இதுசம்மந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆராய்ந்த பொழுது மேல்முறையீட்டாளரின் 25.05.2015 அன்று பெறப்பட்ட விண்ணப்பம் சுமார் இரண்டு மாதங்கள் கழித்து 07.08.2015 அன்றுதான் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. அதன்பின்னர் 26.08.2015 அன்று டெபாசிட் மற்றும் இதர கட்டணங்கள் சேர்த்து ரூ.7800/– வசூல் செய்யப்பட்டுள்ளது.

11.4 மேல்முறையீட்டாளரிடம் அனைத்து கட்டணங்களையும் வசூல் செய்தபின்னரும் அவருக்கு மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளாத நிலையில் சேலம் மின்பகிர்மான மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் முறையீடு செய்யப்பட்டு மன்றமும் தனது 26.09.2017 நாளிட்ட ஆணையில் காவல்துறை உதவியுடன் மின் விஸ்தரிப்பு பணிகளை மேற்கொண்டு 15 தினங்களுக்கு மின் இணைப்பு வழங்க ஆணையிட்டுள்ளது. ஆனால் இதுநாள்வரை மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்கப்படவில்லை என்றும் அறியமுடிகிறது.

11.5 பத்தி 10.2, 10.3 மற்றும் 10.4–ல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரி 25.05.2015 அன்று விண்ணப்பித்ததின்பேரில் இந்நாள்வரை அவருக்கு மின்னிணைப்பு வழங்காததால் இதுசம்பந்தமாக மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதி 7(11)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *7(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்.*

**11.6** மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதியின்படி ஒரு நுகர்வோர் அல்லது மின்னிணைப்பு கோருபவரும் நுகர்வோர் என்ற நிலையில் அவரின் குறைமுறையீடு ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம் என்றும் அறியமுடிகிறது.

**11.7** இவ்வழக்கில் உரிமதாரரின் சேவைக்குறைபாட்டிற்கு மேல்முறையீட்டாளர் இழப்பீடு பெற தகுதியானவர்தான். மின்குறைதீர் மன்றமும் அவருக்கு 15 தினங்களில் மின்இணைப்பு வழங்கவே ஆணையிட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர்களின் வாதமானது மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்க ஆவண செய்து அதற்கான பணிகளை மேற்கொள்ளும் பொழுதெல்லாம் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படுவதால்தான் தற்பொழுதுவரை மின்இணைப்பு வழங்க முடியவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

**11.8** மேலும், தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகள்படி மேல்முறையீட்டாளருக்கு இழப்பீடு வழங்க உரிமதாரர் மின்இணைப்பு வழங்க எடுத்துக்கொண்ட கால அளவு தேவைப்படுகிறது. அதாவது மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கிய பின்புதான் உரிமதாரர் அவ்வாறு மின் இணைப்பு வழங்க தமிழ்நாடு மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்பட்ட காலஅளவைவிட அதிகமாக எவ்வளவு கால அவகாசம் எடுத்துக்கொண்டார் என்று அறியமுடியும். ஆனால் இவ்வழக்கில் இதுநாள்வரை மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லையாதலால் இழப்பீடுக்குரிய கால அளவு நிர்ணயிக்க முடியாத சூழ்நிலையில் மேல்முறையீட்டாளரின் இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று தீர்வு வழங்க இயலாது என்று நான் கருதுவதால் மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு பெற்றபின் இழப்பீடு குறித்து தனியாக கோரிக்கைவிடுத்து உரிமதாரரிடம் இழப்பீடு பெற்றுக்கொள்ளலாம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12.** **<u>கவனிப்பாய்வு –</u>**

**12.1** எதிர்மனுதாரர்கள் மேல்முறையீட்டாளரிடம் பெற்ற **25.05.2018** நாளிட்ட விண்ணப்பத்தை சுமார் இரண்டரை மாத காலஅவகாசத்திற்கு பின் **07.08.2015** அன்றுதான் பதிவுசெய்துள்ளார்கள். அதன்பின் டெபாசிட் மற்றும் இதரகட்டணங்கள் **26.08.2015** அன்றுதான் பெறப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரிடமிருந்து விண்ணப்பம் பெற்றபின் மின்இணைப்பு வழங்கவேண்டிய இடப்பிரச்சினை சம்மபந்தமாக சட்டக்கருத்துரு பெறவேண்டியிருந்ததால்தான் விண்ணப்பம் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர்கள் சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை பதிவு செய்தபின் அதுசம்மந்தமாக சட்டக்கருத்துரு ஏதேனும் தேவைப்பட்டால் பெறப்படவேண்டுமே தவிர விண்ணப்பத்தை பதிவு செய்யும் முன்னரே சட்டக்கருத்துரு கோருவது எதிர்காலத்தில் தவிர்க்கப்படவேண்டியதாகும்.

**13** **<u>முடிவுரை –</u>**

**13.1** பத்தி **10**–ல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கு மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் வழங்கிய தீர்வு ஏற்புடையதாகவே உள்ள நிலையில் மேற்கொண்டு மேல்முறையீட்டாளரின் முதல் கோரிக்கையானது ஏற்கனவே தீர்வு செய்யப்பட்ட ஒன்றாக நான் கருதுவதால் அவரின் முதல் கோரிக்கை தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13.2** பத்தி **11**–ல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு பெற்ற பின் இழப்பீடு குறித்து தனியாக கோரிக்கைவிடுத்து உரிமதாரரிடம் இழப்பீடு பெற்றுக்கொள்ளலாம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13.3** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.**66/2017** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
**1)** திரு. K. விஜயராகவன்,
9/1–67, புலிக்கல் தோட்டம்,
கருப்பூர் அஞ்சல், ஓமலூர் தாலுகா,
சேலம் – **636 012.**

2) செயற் பொறியாளர்/சேலம்/மேற்கு,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அன்னதானபட்டி,
சேலம்– 636 002.

3) உதவி செயற் பொறியாளர்/பகிர்மனம்/ கருப்பூர்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கருப்பூர், சேலம்– 636 012.

4) உதவி பொறியாளர்/ பகிர்மானம்/ கருப்பூர்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
வெள்ளக்கல்பட்டி, கருப்பூர்,
சேலம்– 636 012.

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சேலம், மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.என். காலனி அஞ்சல், சேலம்– 636 014.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.